**OPEN ACCESS**

Manuscript ID: TAM-10042026-10709

Volume: 10

Issue: 4

Month: April

Year: 2026

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 05.03.2026

Accepted: 31.03.2026

Published: 01.04.2026

Citation:
Murugesa Pandian, N. "Is Bharathiyar A Supporter of Marxism?: Some Basic Questions." *Shanlax International Journal of Tamil Research*, vol. 10, no. 4, 2026, pp. 1–6.

DOI:
https://doi.org/10.34293/tamil.v10i4.10709

*Corresponding Author:
murugesapandian2011@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Is Bharathiyar A Supporter of Marxism?: Some Basic Questions

**N. Murugesa Pandian**

*http://orcid.org/0000-0002-1831-7730*

**Abstract**

*Bharathi's view of labor is completely subjective. He presents his ideas in his works in a way that defends the prevailing social and political environment, without considering objective reality. Failed to see the Industrialist X Worker contradiction dialectically as related to the social relations of production, Bharathi, unconcerned about the 'competitive' capitalist market, reduces it to the problem of the individual capitalist. Bharathi, who raised an enthusiastic voice about social change through lyrics like "Agave, the revolution of the age has arisen", "Krita Yuga Ezhuga Madho" has taken a stand against the oppressed in his prose.*

***Keywords:*** *Bharathiyar, Marxism, Politics, Criticism, November Revolution, Soviet Russia, Socialism.*

**References**

1. Majumdar, R.C. et al., Special History of India, Chennai: Tamil Nadu Textbook Institute, 1978.
2. Bharathiyar's Esssays, Chennai: Poompuhar Prasuram, 2000.

# பாரதியார் மார்க்சியத்திற்கு ஆதரவாளரா?: சில அடிப்படைக் கேள்விகள்

*ந. முருகேசபாண்டியன்*

***ஆய்வுச் சுருக்கம்***

*தொழிலாளர் பற்றிய பாரதியின் பார்வை முழுக்க அகவயப்பட்டது. புறநிலை யதார்த்தத்தைப் பரிசீலனை செய்யாமல், நிலவும் சமூக, அரசியல் சூழலைப் பாதுகாக்கும்வகையில் கருத்தினைப் படைப்புகளில் முன் வைத்துள்ளார். முதலாளி தொழிலாளி முரண்பாட்டினைச் சமூக உற்பத்தி உறவுடன் தொடர்புடையதாக இயங்கியல்ரீதியில் காணத் தவறிவிட்டார். "போட்டி" மிகு முதலாளியச் சந்தை குறித்து அக்கறையற்ற பாரதி அதைத் தனிப்பட்ட முதலாளியின் பிரச்சினையாகச் சுருக்குகிறார். ஆகாவென்றெழுந்தது பார் யுகப்புரட்சி, "கிருதயுகம் எழுக மாதோ" போன்ற பாடல் வரிகள்மூலம் சமூக மாற்றம் பற்றி உற்சாகக் குரலெழுப்பிய பாரதி, உரைநடையில் ஒடுக்கப்பட்டோருக்கு எதிரான முடிவெடுத்துள்ளார்.*

***முக்கியச் சொற்கள்:*** *பாரதியார், மார்க்சியம், அரசியல், திறனாய்வு, நவம்பர் புரட்சி, சோவியத் ரஷியா, தர்மகர்த்தா சோசலிசம்.*

இருபதாம் நூற்றாண்டு தமிழ் இலக்கிய உலகில் செல்வாக்குப் பெற்ற ஆளுமைகளில் பாரதியாரின் இடம் தனித்துவமானது. எல்லாவிதமான விமர்சனங்களையும் எதிர்கொள்ளும் வகையில் பாரதியின் எழுத்துகள், இன்று முன்னிலைப்படுத்துப்படுகின்றன. பாரதி தன்னுடைய சமகாலத்தியப் பிரச்சினைகளில் பங்கெடுத்ததுடன், எதிர்காலம் குறித்து அக்கறை கொண்டிருந்ததனால், அவருடைய பார்வையில் பன்முக அம்சங்கள் பொதிந்துள்ளன. பாரதியை அவருடைய ஆகிருதிக்கு மீறிய வாமன வடிவம் தந்து போற்றுவது அல்லது வைதிக சமயச் சார்பின் அடிப்படையில் புறக்கணிப்பது தமிழில் தொடர்ந்து நடைபெறுகிறது. இந்நிலையில் கடந்த நூற்றாண்டில் உருவாக்கப்பட்ட பாரதியின் உச்சமான ஆளுமை இன்னும் எத்தனை காலம் தாக்குப் பிடிக்கும் என்பது முக்கியமான கேள்வி.

பாரதி ஓர் இடதுசாரிக் கவிஞர், மார்க்சிய தத்துவ அடிப்படையிலான புரட்சியில் ஆர்வம் மிக்கவர்" போன்ற கருத்துகளை ஜீவா, தொ.மு.சி.ரகுநாதன் தொடங்கிப் பலரும் விமர்சனங்களில் தொடர்ந்து பதிவாக்கியுள்ளனர். மார்க்சியத் தத்துவத்திற்கும், பாரதிக்கும் இடையிலான உறவினைப் பரிசீலனை செய்திடும்போது இத்தகைய விமர்சனத்தின் உண்மைநிலையினை அறிய முடியும். நவீன இலக்கியச் சூழலில், கவிஞர் என்ற ஆளுமையினை மீறி, பாரதியின் சமூக மதிப்பீடுகள் அவருடைய கட்டுரைகளில் அழுத்தமாகப் பதிவாகியுள்ளன. அவை துல்லியமான வரையறைகளை உடையன. சமூகச் செயற்பாடுகளில் பாரதியின் எதிர்வினையினைக் கண்டறிந்திட, கட்டுரைகள் ஆதாரமாக உள்ளன.

பாரதி வாழ்ந்த 1882-1921 காலகட்டம் இந்திய சமூக அரசியல் வரலாற்றில் பல்வேறு திருப்புமுனைகள் நிறைந்தது. ஆங்கிலேய ஏகாதிபத்திய அடக்குமுறைகள் ஒருபுறமும்,

வைதிக சநாதான சமய மேலாதிக்கக் கொடுமைகள் இன்னொருபுறமும் ஆதிக்கம் செலுத்தின. காலனிய இந்தியாவில் வாழ்ந்த மக்கள் ஐரோப்பியரின் நகலாக வாழ்ந்திடுவதற்காக மெக்காலே உருவாக்கிய கல்வித்திட்டத்தின் விளைவாகச் சென்னை, மும்பை, கொல்கத்தா ஆகிய பெருநகரங்களில் பல்கலைக்கழகங்கள் நிறுவப்பட்டன. அங்கு ஆங்கிலேயக் கல்வி பயின்ற நடுத்தர வர்க்கத்தினரின் எண்ணிக்கை பெருகிக் கொண்டிருந்தது. இதனால் கருத்தியல் ரீதியல் சமூக சீர்திருத்தத்தினைக் கோரிடும் போக்கு மக்களிடையே பரவத் தொடங்கியது.

தொழில் வளர்ச்சியைப் பொறுத்தவரையில் இயந்திர உற்பத்தி காரணமாக இந்தியாவின் மரபுவழிப்பட்ட தொழில்கள் திட்டமிட்ட முறையில் நசுக்கப்பட்டன. கி.பி 19 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கப்பல் கட்டும் தொழிலில் இங்கிலாந்தினை விட சிறப்படைந்திருந்த இந்திய நிலைமையானது மாறியது. பருத்தி, பட்டு, கம்பளி துணி நெசவு, இரும்பு ஆயுதங்கள் தயாரித்தல், தோல் பதனிடுதல், காகித உற்பத்தி, உலோகப் பொருட்கள் தயாரிப்பு, தங்க நகைகள் செய்தல் போன்ற மரபு வழிப்பட்ட கைத்தொழில்கள் சிதைக்கபட்டதனால், கைவினைஞர்களும் தொழிலாளர்களும் வறுமைக்குள்ளாயினர். இந்தியத் தொழில் வளத்தினைச் சிதைத்திட்ட ஆங்கிலேயர்கள், நாளடைவில் கச்சாப் பொருட்களைத் தயாரிக்கும் இடமாகவும் இங்கிலாந்தில் உற்பத்தியான பொருட்களை விற்பனை செய்யும் சந்தையாகவும் இந்தியாவை மாற்றினர்[1]. பின்னர் காலப்போக்கில் இந்தியாவில் கிடைத்த மலிவான மனித உழைப்பினைக் கருத்தில்கொண்டு, நிதி மூலதனத்தினை ஏற்றுமதி செய்து, இந்தியாவில் தொழிற் சாலைகளை நிறுவினர். 1900 ஆம் ஆண்டிற்குள் நாடெங்கும் 193 ஆலைகள் நிறுவப்பட்டன.[2] மேலும் தந்தி, அஞ்சல், ரயில் போக்குவரத்து, பத்திரிக்கைகள் போன்ற தகவல் தொடர்புக் கருவிகள் தொழில் வளர்ச்சிக்குத் துணையாக ஏற்படுத்தப்பட்டன.

தொடக்கத்தில் ஆங்கிலேய முதலாளிகள் நிலவுடைமையாளர்களுடன் இணைந்து பொருளுற்பத்தியையும், சந்தையையும் விரிவாக்க முயன்றனர். இந்நிலையில் 1905இல் தோற்றுவிக்கப்பட்ட இந்திய சுதேசி இயக்கம், பஞ்சாலைத் தொழிலுக்கு அளித்த ஊக்கத்தினால் இந்திய முதலாளிகள் சொந்த மாகத் தொழிற்சாலைகளை நிறுவி, இங்கிலாந்து உற்பத்தியாளர்களுடன் போட்டியிட வேண்டிய நிலைஏற்பட்டது. பிரிட்டிஷ் அரசு பின்பற்றிய 'தடையில்லா வணிகக் கொள்கை' காரணமாக இந்தியத் தொழில்கள் மேலும் சீரழியத் தொடங்கின. இத்தகைய சூழலில்தான் பாரதியாரின் தந்தை சின்னச்சாமி ஐயர், நிர்வாக இயக்குநராக இருந்து, 1892 ஆம் ஆண்டு, எட்டையாபுரத்தில் 'எட்டயபுரம் காட்டன் ஜின் பாக்டரி (லிமிடெட்)' என்ற பெயரில் தொடங்கிய ஆலையானது மூன்று ஆண்டு களில், பெரும் நஷ்டம் காரணமாக இழுத்து மூடப்பட்டதனைப் புரிந்து கொள்ள வேண்டும். இதுவே பாரதி வாழ்ந்த கால கட்டத்தில் இந்திய தொழில் நிலைமை பற்றிய குறுக்குவெட்டுத் தோற்றம்.

மேலைநாட்டாரின் தொழில்நுட்ப அறிவினைக் கற்றறிந்து, இங்குள்ள பாரம்பரிய தொழில்களை வளர்ப்பதுடன் நவீன ஆலைகளையும் ஏற்படுத்த வேண்டுமென்ற எண்ணமுடையவர் பாரதியார். அவருடைய நோக்கில் மரபு வழிப்பட்ட கைத் தொழிலின் மேன்மையும் நவீனமான இயந்திர வகைப்பட்ட கனரகத் தொழிலின் அவசியமும் ஒருங்கிணைந்துள்ளன. உடல் உழைப்பு, புத்தி உழைப்பு, ஆகிய இரு வகைகளிலும் உழைக்கின்றவர்களைத் தொழிலாளர்கள் என்று குறிப்பிடும் சுதேச மித்திரன் தலையங்கக் கருத்து, பாரதிக்கு ஏற்புடையதாக உள்ளது. அது, ஐரோப்பியத்

தொழில்முறை இந்தியாவில் பரவுவதனால் உண்டாகும் நிலையென்று விளக்கம் தருகின்றவர், தொழிற்புரட்சியினால் தொழிலாளர் விழிப்புணர்வு பெற்றனர் என்று குறிப்பிடுகின்றார்.

தொடக்கத்தில் ஊதிய உயர்வினுக்காகப் போராடிய தொழிலாளர்கள், நாளடைவில் அரசியலதிகாரத்தினைக் கைப்பற்றினால் தான், நிரந்தரமான தீர்வு கிடைக்குமென்ற அரசியல் அறிவு பெறுகின்றனர். முதலாளிய அமைப்பில் ஆளும் வர்க்கம் எப்பொழுதும் முதலாளிகளுக்குச் சார்பாக இருப்பதனால், முதலாளி X தொழிலாளர் போராட்டங்கள் நசுக்கப்படுகின்றன. தொழிலாளி முரண் தீவிரமடையும் நிலையில், இழப்பதற்கு எதுவுமற்ற தொழிலாளர்களுக்குத் ‘தொழிற்சங்கம் அடிப்படைப் பலம்’ தரும் நிறுவனமாகும். சர்வதேச ரீதியில் தொழிலாளர் போராட்டங்கள் பற்றி அறிந்திட்ட பாரதி, தொழிலாளர்கள் ஒன்றுகூடி ‘தொழிற்சங்கம்’ நிறுவுவது அவசியமென்று கருதுகிறார். ‘‘இப்போது நமது நாட்டில் அங்கங்கே தொழிற்சங்கங்கள், ஸ்தாபனம் செய்யப்பட்டு வருகின்றன. இச்சங்கத்தார்கள் சம்பள ஏற்றத்தினுக்காக வேலைநேரத்தைக் குறைப்பதற்கும் வேண்டிய பல யத்தனங்கள் செய்துகொண்டு வருகிறார்கள். இந்தப் பிரயத்தனங்கள் எல்லாம் முற்றிலும் நியாயமே. இதில் ஐயமில்லை.[3] நிலவுடைமைக் கருத்தியல் பின்புலமுடைய பாரதி தொழிற்சங்கத்தை வரவேற்பது. அன்றைய சூழலில் முற்போக்கானது. தொழிலாளர்கள் பள்ளிக் கூடங்களை நிறுவி. தொடர்ந்து தத்தம் குழந்தைகளைப் பள்ளிக் கூடங்களுக்கு அனுப்புவதுடன், இரவுப் பள்ளிகளில் அவர்கள் கற்க வேண்டுமென்று அறிவுறுத்துவது, தொழிலாளர் நலன் பற்றிய அக்கறையின் விளைவாகும்.

தொழிலாளி X முதலாளி முரண்பாட்டினைக் களைந்திட பாரதி முன்வைக்கும் கருத்துகள், தொழிலாளர் பற்றிய மதிப்பீட்டில் முக்கியமானவை. நிலவுடைமை ரீதியிலான உற்பத்தி முறையில் நிலவும் உற்பத்தி உறவுகளைத் தொழிற்சாலையில் பயன்படுத்த வேண்டுமென்ற பாரதியின் தீர்வானது ஆழ்ந்த விவாதத்திற்குரியது. இந்தியாவில் முதன்முதலாகத் தொழிலாளர் கிளர்ச்சி தோன்றியிருக்கும் இந்தச் சமயத்திலே, நம்முடைய ஜனத்தலைவர்கள், முதலாளிகள், தொழிலாளர்கள் என்று இரு திறத்தினரையும் ஆதரவுடன் கலந்து புத்தி சொல்லி மனஸ்தாபங்களை ஏறவொட்டாதபடி முளையிலே கிள்ளிவிட முயற்சி செய்ய வேண்டும்.”[4] என்ற பாரதியின் தொழிலாளர் போராட்டம் பற்றிய தீர்வானது, முழுக்க நிலவுடைமைக் கருத்தியலைப் பின்புலமாகக் கொண்டது. இன்னொருநிலையில், அவருடைய கருத்தானது வரலாற்றைப் பின்னுக்கிழுக்க முயலுகிறது.

*1917*இல் ரஷியாவில் ஜார் மன்னனை எதிர்த்து நடைபெற்ற புரட்சியை வரவேற்று உற்சாகத்துடன் எழுதிய பாரதியார், இந்தியாவில் ஆங்காங்கே தொழிலாளர்கள் உரிமைக்காகப் “போராடியபோது ருஷ்யாவிலுள்ள குழப்பங்களெல்லாம் இங்கு வந்து சேர ஹேது உண்டாகிவிடும் என்று அஞ்சுகிறார்.[5] சோவியத் புரட்சியின் சிறப்பைக் கண்டு வியந்திடும் பாரதியாருக்குப், புரட்சியின் போது நடைபெற்ற வன்முறைகள் ஏற்புடையனவாக இல்லை “...ருஷியாவிலுள்ள அபேதவாதிக கொள்கைகள் அவ்வளவு தீங்குடையனவல்ல. ஆனால் அவற்றை வழக்கப்படுத்தும் பொருட்டு அவர்கள் நாட்டில் ஏற்பட்டுத்தியிருக்கும் தீராச் சண்டையும் அல்லலுமே தீங்கு தருவனவாகும்[6] லெனின் வழி சரியில்லை என்று மறுக்கும் பாரதியின் கருத்து, கேள்விகளை எழுப்புகின்றது. இழப்பதற்கு எதுவுமற்ற தொழிலாளர்கள் உரிமைக்காகப் போராடும்போது. முதலாளிகளும், ஆளும்வர்க்கமும் பிரயோகிக்கும் வன்முறையினை எப்படி எதிர்கொள்வது? அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான தொழிலாளர்களின் ஆயுதமேந்திய எழுச்சியைப்

பற்றிய பாரதியின் கருத்து, சமரச தன்மையுடையதெனினும் அடிப்படையில் முதலாளிகளுக்குச் சார்பானதாகும்.

இந்தியாவில் தொழிலாளி வர்க்கம் பெரிய வளர்ச்சியடையாத நிலையில், சோசலிசப் புரட்சி இந்தியாவில் ஏன் ஏற்படவில்லை என்ற கேள்வியை எழுப்பிக்கொண்டு பாரதி முன்வைக்கும் வாதங்கள், அரசியல் ரீதியாக அவருடைய பலவீனத்தினைக் காட்டுகின்றன. முதலாளி, தொழிலாளி செல்வன், ஏழை இவர்களுக்கிடையே ஐரோப்பாவில் உள்ள பிரிவும் விரோதமும் நம் தேசத்தில் இல்லை. ஏழைகளை அங்குள்ள செல்வர் அவமதிப்பது போலேநமதுநாட்டுச்செல்வர்அவமதிப்பது கிடையாது.[7] இங்குத் தொழிலாளி முதலாளி முரண்பாட்டினைக் கருணை அடிப்படையில் அணுகி பாரதி தரும் விளக்கம் ஏற்புடையதல்ல. இந்திய நிலவுடைமையாளர்கள் உழவர்களையும், அடித்தட்டு மக்களையும் கசக்கிப் பிழிந்ததுடன் தீண்டாமையைக் காரணம் காட்டி ஒதுக்கிய வன்முறைமிக்க சமூக வரலாற்றினைப் பற்றிய பாரதியின் மதிப்பீடு, அறிவியல் பூர்வமானது சநாதனமான வைதிக சமயம் காலந்தோறும் விளிம்புநிலை மக்களை அடக்கியொடுக்கிச் சுரண்டியது பாரதியின்பிரக்ஞையில்ஏன்உறுத்தவில்லை என்பது முக்கியமான கேள்வி. சமூக உற்பத்திமுறை தோற்றுவிக்கும் முரண்பாட்டினைத் தனிமன விருப்பு வெறுப்பாகச் சுருக்குவது இயங்கியல் போக்கினுக்கு எதிரானது. இதனால் தான் அவர் "அன்பினால் உலகத்தின் துன்பங்களை எளிதாக மாற்றி விடலாம்[8] என்று தொழிலாளர் பிரச்சினைக்குத் தீர்வு தரமுயலுகிறார். அவருடைய தீர்வு நடைமுறைச் சாத்தியமற்றது. புரட்சிக்குப் பிந்திய சோவியத் ரஷியாவில் நடைபெற்ற உள்நாட்டுப் போர்கள், மோதல்கள் பற்றி மேலை ஏகாதிபத்தியங்கள் தொடர்ந்து நடத்திய கருத்தியல் பிரச்சாரம் பாரதியின் மனதில் பெரும் தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது. மார்க்சியம் பற்றிக் காரல் மார்க்ஸ், ஏங்கெல்ஸ், லெனின், டிராட்ஸ்கி போன்றோர் எழுதிய ஆவணங்களைப் பாரதி படித்தாரா என்பது தெரியவில்லை. அதற்கான வாய்ப்பு மிகவும் குறைவு. இதனால்தான் தொழிலாளர்களின் தொழிற்சங்கத்தை வரவேற்கும் பாரதிக்கு அவர்கள்அமைப்புரீதியில்அதிகாரத்தினைக் கைப்பற்றிடச் செய்யும் சமூக முயற்சிகள் வன்முறையாகத் தோன்றுகின்றன.

இந்தியாவில் ஏழைகளின் பசியைப் போக்கிடப் பாரதியார், தர்மகர்த்தா சோசலிச முறையினைத் தீர்வாக முன்மொழிகின்றனர். அது நடைமுறையில் சாத்தியம் தானா என்பது குறித்து அவருக்கு அக்கறையில்லை. வறுமையில் வாடி எட்டையபுரம் ஜமீந்தாருக்குச் சீட்டுக்கவி எழுதும் நிலைக்குத் தள்ளப்பட்டவரான பாரதி சொத்துடைவர்கள் ஏழைக்கு உதவ வேண்டுமென்ற தர்மத்தினைப் போதிப்பது வேடிக்கையானது. சங்க காலத்திலிருந்தே செல்வந்தர்கள் அடுத்தவேளை உணவுக்கு வழியற்றுக் கையேந்தி நிற்கும் ஏழைகளுக்கு உணவிடுதலை 'அன்னதானம்', "தர்மம்" என்று குறிப்பிடும் தமிழகத்துச் சூழ்நிலையினை எண்ணி வேதனையடையாமல், அதனை வறுமையைப் போக்கிடும் தீர்வாகப் பாரதி முன்வைப்பது நடைமுறையில் முரண்பாடானது. பூமண்டலத்தின் வறுமையைப் போக்கிட அவர் சொல்லும் உபாயம் முழுக்கப் புனைவு வயப்பட்டது. நிலஸ்வான்கள் கிராமந்தோறும் ஒன்று கூடி "... அந்தந்த தொழில்களுக்குத் தக்கப்படியாக ஆண், பெண், குழந்தை, முதியோர் இளைஞர், அத்தனைபேரிலும் ஒருவர் தவறாமல் எல்லோருக்கும் வயிறு நிறைய நல்லபடியாக ஆகாரம் கொடுத்து விடுகிறோம்."[9] என்று தெய்வசந்நிதியில்சத்தியம்செய்யவேண்டும் என்று குறிப்பிடுகின்றார் பாரதியார். தினமும்உழைத்துவாழத்தயாராகவிருக்கும் அன்றாடங்காய்ச்சிகளின் பிரச்சினையான உணவு மட்டும் செல்வந்தர்களின் சகாயத்தால் தீர்க்கப்படுமென்று பாரதியார் காணும் நடைமுறைசாத்தியமற்ற'உட்டோப்பியன்'

வகைப்பட்டது. மனிதன் சுய அறிவுடன் சிந்தித்து இரு கரங்களால் உழைக்கும் 'உயிர்' என்பதற்கு மாறாக கனவு, நடைமுறை சாத்தியமற்ற "உட்டோபியன்" வகைப்பட்டது. மனிதன் சுய அறிவுடன் சிந்தித்து இரு கரங்களால் உழைத்து வாழ்ந்திடும் "உயிர்" என்பதற்கு மாறாகச் சொத்துடைமையாளர்களைச் சார்ந்து உணவு பெறுதல் என்பது ஒரு வகையில் பிச்சை எடுப்பது போன்றது. அது, கேவலமானதும்கூட. செல்வம் குறித்த பாரதியின் மதிப்பீடு, அன்றைய நாட்டு விடுதலைப் போராட்டத்தில் முன்னிலை வகித்த தேசிய முதலாளிகளின் நலன்களைப் பாதுகாக்கிறது.

தொழிலாளர் பற்றிய பாரதியின் பார்வை முழுக்க அகவயப்பட்டது. புறநிலை யதார்த்தத்தைப் பரிசீலனை செய்யாமல், நிலவும் சமூக, அரசியல் சூழலைப் பாது காக்கும் வகையில் கருத்தினை முன் வைத்துள்ளார். முதலாளி X தொழிலாளி முரண்பாட்டினைச் சமூக உற்பத்தி உறவுடன் தொடர்புடையதாக இயங்கியல் ரீதியில் காணத் தவறிவிட்டார். முதலாளி சந்திக்க நேரிடும் போட்டியில் தன்னுடைய இடத்தைத் தக்க வைத்துக்கொள்ளவும் ஆதாயத்தைப் பெருக்கிடவும், தொழிலாளர்களைக் கசக்கிப் பிழிய வேண்டிய நிலையேற்படுகிறது. 'போட்டி' மிகு முதலாளியச் சந்தை குறித்து அக்கறையற்ற பாரதி அதைத் தனிப்பட்ட முதலாளியின் பிரச்சினையாகச் சுருக்குகிறார். ஆகாவென்றெழுந்தது பார் யுகப்புரட்சி, "கிருதயுகம் எழுக மாதோ" போன்ற பாடல் வரிகள் மூலம் சமூக மாற்றம் பற்றி உற்சாகக் குரலெழுப்பிய பாரதி, உரைநடையில் மாறுபட்ட முடிவெடுத்துள்ளார். அவருடைய சமகாலத்திய அரசியல், பொருளியல் சூழலில் மாறிவரும்நிலைமைகளைஅவதானிப்பதில் பாரதிக்குப் பிரச்சினையேற்பட்டுள்ளது. இந்தியாவில் வலுவாக இருந்த நிலவுடைமைச் சமுதாய அமைப்பின் கருத்தியலிருந்து வெளியேற இயலாமல் தவிக்கின்றார். சர்வதேசிய அளவில் சோவியத் ரஷியாவில் நடைபெற்ற புரட்சியின்போது நடைபெற்ற வன்முறையினைக் காரணம் காட்டி அதை ஒதுக்கிட முயலுகிறார். ஏற்கனவே இந்தியாவில் நிலவும் நிலவுடைமைச் சமுதாய அமைப்பினுக்குள் சிற்சில சீர்திருத்தங்கள் செய்து அவற்றை மாற்றாகப் பாரதி முன் வைக்கிறார். அமைப்புரீதியில் ஒன்று திரட்டப்பட்ட தொழிலாளர்கள் தங்கள் உரிமையை நிலைநாட்டிட, ஆட்சியதிகாரத்தில் இருக்கும் ஆட்சியாளர்களைப் புரட்சியின் மூலம் தூக்கியெறிந்து பாட்டாளிவர்க்கச் சர்வாதி காரத்தினை நிலை நிறுத்துவது என்ற மார்க்சிய நிலைப்பாட்டினுக்குப் பாரதியின் தொழிலாளர் கொள்கை முரண்பாடாக உள்ளது.

எனவே பாரதியார் மார்க்சிஸ்ட் என்பது போன்று சிலர் முன்னிறுத்தும் ஒற்றைப் பிம்பம் பொருத்தமானது அல்ல. சமூக விடுதலையை நேசிக்கும் கவிஞன் என்ற நிலையில் சோவியத் புரட்சியை வரவேற்றுப் பாரதி பாடியது அன்றைய காலகட்டத்தில் முக்கியமானது என்பதே அவருக்குப் பெருமை தருவதாகும். மற்றபடி பாரதியின் கருத்தியலுக்குப் பொருந்தாத வேஷங்களைக் கொண்டு கூட்டி அவர் மீது திணிப்பது முரண்பாடானது; முறையற்றதும்கூட. இன்னும் சொன்னால் இத்தகைய முயற்சிகள் பாரதியாருக்குச் செய்யும் துரோகமுமாகும்.

## சான்றாதாரம்

1. மஜும்தார், ஆர்.சி. பிறர்., இந்தியாவின் சிறப்பு வரலாறு, சென்னை: தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், 1978. பக் 266-267.
2. மேலது ப.205
3. பாரதியார் கட்டுரைகள், சென்னை: பூம்புகார் பிரசுரம், 2000. ப.274
4. மேலது ப.279
5. மேலது ப.279
6. மேலது பக்.279-280
7. மேலது ப.288
8. மேலது ப.289
9. மேலது ப. 300.